நிர்வாகச் சுருக்கம்

# நமது சிங்கப்பூர் மரபுடைமை திட்டம் 2.0

National Heritage Board

# மரபுடைமை என்பது நம்முடைய பற்றுகள், உடைமையுணர்வு, எதிர்காலம் குறித்த நம்பிக்கை ஆகியவற்றைக் கட்டிக்காக்கும் அஸ்திவாரம்.

**நமது சிங்கப்பூர் மரபுடைமை திட்டம் 2.0** – சிங்கப்பூரின் மரபுடைமை மற்றும் அரும்பொருளகத் துறைக்கான அடுத்த அத்தியாயத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். இத்திட்டம் 2023 முதல் 2027 வரையிலும் அதற்கு அப்பாலும் எங்களுக்கு வழிகாட்டும். இப்புதிய திட்டம், முதலாவது மரபுடைமை பெருந்திட்டமான **நமது சிங்கப்பூர் மரபுடைமை திட்டம்** உருவாக்கித்தந்த வலுவான அடிப்படைகளைப் முன்னெடுத்துச் செல்லும். நமது மரபுடைமைத் துறையின் எதிர்காலத்தை வடிவமைக்கப்போகும் தொலைநோக்கையும் உத்திகளையும் புதிய திட்டம் உள்ளடக்குகிறது.

கலாசார மரபுடைமை என்பது நம்மை நம் கடந்தகாலத்ததுடன் சேர்க்கும் வெறும் ஒரு தொடர்பு மட்டுமல்ல என்பது எங்களின் உறுதியான நம்பிக்கை. கலாசார மரபுடைமை நம் அடையாளத்தின் இன்றியமையாத ஒரு பகுதியாகும். நம்முடைய உடைமையுணர்வும் எதிர்காலத்திற்கான நம்பிக்கையும் வளர்வதற்கு இது துணைபுரிகிறது. நமது தேசிய அடையாளம், சமூகத்திலும் பொருளியல் சூழலிலும் நேரும் மாற்றங்களுக்கு ஏற்ப மாறி வருவதால், நமது மரபுடைமை உத்திகளும் தொலைநோக்குடன், சூழ்நிலைக்கு ஏற்ப மாறக்கூடிய நீக்குப்போக்குடன் இருப்பது அவசியம்.

மரபுடைமை அனைவருக்கும் பொதுவான ஒரு சொத்து என்பதால், நமது மரபுடைமையைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் அதிகமான சிங்கப்பூரர்களை ஈடுபடுத்தவும், அவர்களின் பங்கேற்புக்கு ஆற்றல் அளிக்கவும் நாங்கள் முனைப்புடன் முயற்சி எடுப்போம். தொழில்நுட்பத்தின் துணையுடன், மரபுடைமைத் துறையில் புத்தாக்கத்திற்கும், படைப்பாற்றலுக்கும், கூட்டு முனைப்புக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தர முற்படுவோம். நமது செறிவுமிக்கக் கலாசார மரபுடைமையைப் பக்கபலமாகக் கொண்டு, அனைவரையும் உள்ளடக்கும் மீள்திறன்மிக்கச் சமுதாயத்தை நம்மால் ஒன்றிணைந்து உருவாக்க முடியும்.

பிரகாசமான எதிர்காலத்தை நோக்கிச்செல்லும் இந்த விறுவிறுப்பான பயணத்தில் எங்களுடன் சேர்ந்து பயணம் செல்ல சிங்கப்பூரர்கள் அனைவரையும் அழைக்கிறோம்! நம்முடைய கலாசார மரபுடைமை தழைத்து, புத்தாக்கமும் படைப்பாற்றலும் செழித்து, பொதுவானதொரு வாழ்க்கை மரபுக்குப் பங்களிக்க அனைவருக்கும் வாய்ப்பிருக்கும் எதிர்காலத்தை உருவாக்க ஒன்றிணைந்து செயல்படுவோம்.

## இலக்குகள்

சிங்கப்பூர் மரபுடைமை திட்டம் 2.0 நிறைவேற்ற விரும்பும் இலக்குகள்:

- சிங்கப்பூரின் மரபுடைமை மற்றும் அரும்பொருளகத் துறைக்காக இயக்காற்றல்மிக்க எதிர்காலம் அமைத்துத் தரப்படும். இத்தகைய எதிர்காலம் நமது பன்மய கலாசார மரபுடைமையைக் கொண்டாடி, நாம் பகிரும் வரலாற்றைக் கூட்டாகப் படைக்க சமூகத்திற்கு ஆற்றலளித்து, நமது தொழில்துறையின் நீடித்த நிலைத்தன்மையை உறுதிப்படுத்த புத்தாக்க, தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்தும்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளிலும் அதற்கு அப்பாலும், உருமாறிவரும் சமூகப் பொருளியல் நடைமுறைகளையும் நமது சமுதாயத்தின் தேவைகளையும் கருத்தில் கொண்டு, துடிப்பான, அனைவரையும் உள்ளடக்கிய, முன்னோக்குள்ள மரபுடைமைத் துறை உருவாக்கப்படும்.
- நமது எதிர்காலத் திட்டம் பகிரப்படும். இதன்வழி, பரந்த உத்திகளையும் முனைப்புகளையும் அனைவரும் தெரிந்துகொண்டு, நமது மரபுடைமையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பங்குபெற முடியும்.

## பொதுமக்களின் ஈடுபாடு

மரபுடைமை அனைவருக்கும் உரியது என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அதனால்தான், நமது மரபுடைமை திட்டம் 2.0 வடிவமைப்பின்போது பொதுமக்கள், மரபுடைமை வல்லுநர்கள் ஆகிய இரு தரப்பினரின் கருத்துகளையும் நாங்கள் கேட்டறிய விரும்பினோம்.

பொதுமக்களும் பங்குதாரர்களும் அளித்த கருத்துகள், நமது மரபுடைமை துறையின் எதிர்காலத்திற்காக மேலும் ஒருங்கிணைந்த பெருந்திட்டத்தை உருவாக்குவதற்கு முக்கிய துணை புரிந்தன.

**> 650**
பங்குதாரர்கள்

**> 50**
நோக்கக்குழு கலந்துரையாடல்கள்

இணையம் வழியும் கூடங்களில் நேரடியாகவும்

**> 72,000**
கருத்துகள்




நமது சிங்கப்பூர் மரபுடைமை திட்டம் 2.0 பற்றிய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ள பொதுமக்களுக்கு அழைப்புவிடுத்த ஏழு கூடங்களில் ஒன்று.



தோ பாயோவில் உள்ள கடல்நாக விளையாட்டுத்திடல், 2018 ஆம் ஆண்டின் சிங்கப்பூர் மரபுடைமை விழாவின் ஒரு பகுதியாக ஒளியூட்டப்பட்டது.

### நமது நோக்கம்

பெரிதும் செறிவூட்டப்பட்ட மரபுடைமைச் சூழலுடன்:

- ஒற்றுமையான, பல இன சிங்கப்பூர் கொண்டாடப்படும்
- காலம், இடம், கலாசாரங்கள் அனைத்தின்வழியும் நாம் இணைக்கப்பட்டிருப்போம்
- சிங்கப்பூரின் கதையை இன்னும் பலர் சொல்வதற்கு இடம் உருவாக்கப்படும்



# 4 அடிப்படை கூறுகள்

நமது சிங்கப்பூர் மரபுடைமை திட்டம் 2.0 நான்கு முக்கிய வளர்ச்சிக் கூறுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது: **அடையாளம்**, **சமூகம்**, **தொழில்துறை**, **புத்தாக்கம்**. இந்நான்கு கூறுகளையும் ஒன்றாக மேம்படுத்துவதன்வழி, நமது தேசிய அடையாளம் வலுவடைந்து, சிங்கப்பூரர்கள் மேலும் ஒன்றிணைந்து, சிங்கப்பூரின் அரும்பொருளகம் மற்றும் மரபுடைமைத் துறையின் பொருளியல் ஆற்றலை மேலும் ஊக்குவித்து, படைப்பாற்றலும் புத்தாக்கமும் வளர்ந்து, பொது அமைப்புகளுக்கும் பரந்த சமுதாயத்திற்கும் இடையிலான பங்காளித்துவம் வலுபெறும் என்று நாங்கள் நம்புகிறோம்.

## அடையாளம்

நமது பல இன கலாசார மரபுடைமை, பன்மயத்தன்மை ஆகியவற்றிலிருந்து பலம் பெறும் ஊக்கம் நிறைந்த நாடு



## சமூகம்

நமது மரபுடைமையில் வேரூன்றி, நம் கூட்டுக் கதையைச் சொல்வதில் நாட்டமுள்ள ஒன்றிணைந்த மக்கள்





## தொழில்துறை

மக்களை மதித்து, தொழில்துறையுடன் இணைந்து, சிங்கப்பூரர்களுக்காக வாய்ப்புகளை உருவாக்கித்தரும் துடிப்புமிக்க மரபுடைமைச் சூழல்



## புத்தாக்கம்

புத்தாக்கத்தோடும் படைப்பாற்றலோடும் எதிர்காலத்தை நோக்கத் தயாரான மரபுடைமைத் துறை



**நமது சிங்கப்பூர் மரபுடைமை திட்டம் 2.0**
உள்ளடக்கிய முக்கிய முனைப்புகளின் சுருக்கமான விவரம்

# மரபுடைமை x அடையாளம்

நமது பல இன கலாசார மரபுடைமை, பன்மயத்தன்மை ஆகியவற்றிலிருந்து பலம் பெறும் ஊக்கம் நிறைந்த நாடு

1. சிங்கப்பூரின் கடல்துறை மரபுடைமையைப் பாதுகாத்துவைக்கவும் ஆராயவும் முயற்சி மேற்கொள்ளப்படும்.
2. வடிவமைப்பு திரட்டு ஒன்று உருவாக்கப்படும்.
3. யுனெஸ்கோவின் புலனாகா மானிட கலாசார மரபுடைமை பிரதிநிதிப் பட்டியலில் சிங்கப்பூரின் பிரதிநிதிப்பு விரிவுபடுத்தப்படும்.
4. நமது தொல்பொருள் பொக்கி ஷங்கள் மேம்படுத்தப்பட்டு, பராமரிக்கப்படும்.
5. சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் சமகால சிங்கப்பூர் திரட்டை சேகரிக்கும் முனைப்பு மேம்படுத்தப்படும்.
6. சிங்கப்பூர்ச் சிற்பிகள் நினைவகத்தின் உருவாக்கமும் அதில் பொதுமக்களின் ஈடுபாடும் வழிநடத்தப்படும்.



கட்டடங்களின் வரலாறு: கற்களின் நினைவுச்சின்னங்கள் என்ற தலைப்பிலான நடமாடும் கண்காட்சியில் இடம்பெற்றிருந்த சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் Lego குறுவடிவத்தைச் சிறுவர்கள் பார்வையிடுகின்றனர்.

# மரபுடைமை x சமூகம்

நமது மரபுடைமையில் வேரூன்றி, நம் கூட்டுக் கதையைச் சொல்வதில் நாட்டமுள்ள ஒன்றிணைந்த மக்கள்

1. நாம் வசிக்கும் குடியிருப்பு வட்டாரங்களுக்கு உயிரூட்டவும், மரபுடைமையின் எட்டுதலை மேலும் விரிவுபடுத்தவும், சமூகத்துடன் சேர்ந்து மரபுடைமை செயலாக்க மையங்கள் அமைக்கப்படும்.
2. இளையர்கள் மரபுடைமையில் ஈடுபடவும் ஆதரவளிக்கவும் அதிக ஊக்கமளிக்கப்படும்.
3. ஆரோக்கியத்திற்கும் நல்வாழ்வுக்கும் துணைபுரியும் மரபுடைமை சார்ந்த உதவிகள் வெள்ளோட்டம் காணும்.
4. தொண்டூழியச் சேவையுணர்வு வளர்க்கப்படும்.
5. சமூகத்தின் மரபுடைமை ஆற்றல்கள் வலுப்படுத்தப்படும்.




லூங் ஃபாட் தாவ் சா பியாவின் தற்போதைய உரிமையாளர் சேவியர் லீ (இடமிருந்து ஏழாவது நபர்), தனது குடும்பத்தினர் மற்றும் ஊழியர்களுடன் காணப்படும் புகைப்படம். இந்தத் தொழிலின் மரபுடைமையைப் படைக்கும் காட்சிப்பேழை, தேசிய மரபுடைமைக் கழகத்தின் தெருமுனை மரபுடைமை கண்காட்சிக்கூடங்கள் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

# மரபுடைமை x தொழில்துறை

மக்களை மதித்து, தொழில்துறையுடன் இணைந்து, சிங்கப்பூரர்களுக்காக வாய்ப்புகளை உருவாக்கித்தரும் துடிப்புமிக்க மரபுடைமைச் சூழல்

1. மரபுடைமை சார்ந்த தொழில் நிறுவனங்களும் பாரம்பரியத் திறன்களும் நீடித்து நிலைப்பதற்கு ஆதரவளிக்கப்படும்.
2. ஆர்மீனியன் தெரு கைவினைக் கலையும் படைப்பாற்றலும் தழைக்கும் வட்டாரமாக உருமாற்றப்படும்.
3. சிங்கப்பூரின் நற்பெயரைப் பரப்ப, நமது திரட்டுகளும் கதைகளும் வெளிநாடுகளில் காட்சிப்படுத்தப்படும்.
4. மரபுடைமை மற்றும் அரும்பொருளகத் துறையில் உள்ள மரபுடைமை வல்லுநர்களின் ஆற்றல்கள் வலுப்படுத்தப்படும்.



சிங்கப்பூர் இரவு விழாவின்போது ஆர்மீனியன் தெருவில் உள்ள பேரானாகான் அரும்பொருளகத்தில் ஜாஸ் பிசாஸ் அரங்கேற்றிய நிகழ்ச்சி.

# மரபுடைமை x புத்தாக்கம்

புத்தாக்கத்தோடும் படைப்பாற்றலோடும் எதிர்காலத்தை நோக்கத் தயாரான மரபுடைமைத் துறை

1. அதிநூதனத் தொழில்நுட்பத்தின் மூலம் மரபுடைமை கலந்துறவாடல்கள் மேம்படுத்தப்படும்.
2. அரும்பொருளக நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கவும், வருகையாளர்களின் அனுபவங்களை மேம்படுத்தவும் அறிவார்ந்த எந்திரனியலும் செயற்கை நுண்ணறிவும் பயன்படுத்தப்படும்.
3. தனிப்பட்ட உள்ளடக்கங்களையும் பரிந்துரைகளையும் வழங்குவதன் மூலம் மரபுடைமையில் ஈடுபாடு அதிகரிக்கப்படும்.
4. எதிர்காலப் பருவநிலையைத் தாக்குப்பிடிக்க, நீடித்த நிலைத்தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கும் மரபுடைமை மற்றும் அரும்பொருளகத் துறை உருவாக்கப்படும்.
5. மரபுடைமை பாதுகாப்பு நிலையத்தின் திரட்டைப் பராமரிக்க புதிய அறிவியல் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

மெய்நிகர் கம்போங் கெலாம், மின்னிலக்க நகல்களைப் பயன்படுத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க கம்போங் கெலாம் வட்டாரத்தை மிகைப்படுத்தப்பட்ட மெய்மை ஆராய்வைப் பயன்பாட்டாளர்களுக்கு வழங்குகிறது.



**நமது சிங்கப்பூர் மரபுடைமை திட்டம் 2.0 தயாரிப்பில் எங்களுடன் பங்கெடுத்த அனைவருக்கும் தேசிய மரபுடைமைக் கழகம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.**

go.gov.sg/hp2-website

நமது சிங்கப்பூர் மரபுடைமை திட்டம் 2.0 இணையத்தளத்தைப் பார்வையிட, விரைவுத் தகவல் (QR) குறியீட்டை ஒளிவருடல் செய்யுங்கள்

National Heritage Board